திரு. வை. சங்கரன் : மதுரை-இராமநாதபுரம் சேம்பர் ஆப் காமர்ஸ், புட் அடல்ட்ரேஷன் ஆக்ட் சம்பந்தமாகக் குறிப்பிட்டு இன்னென்ன திருத்தங்கள் செய்யப்படவேண்டும் என்று அரசாங்கத்திற்கு அறிக்கை அனுப்பியிருக்கிறார்களா? இப்பொழுது அரசாங்கம் ஒரு திருத்தம் சம்பந்தமாகச் சொன்னார்கள். பாக்கியுள்ள திருத்தங்கள் சம்பந்தமாக ஏதாவது இந்த அரசாங்கம் சிபார்சு அனுப்பி வைத்திருக்கிறார்களா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இந்த ஆக்ட் அடிப்படையில் எல்லா உணவுப் பண்டங்களின் அடல்ட்ரேஷனும் வருகிறது. ஆகையால் அதுதான் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது.

Employment opportunities

*381 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any study has been undertaken by the State Employment Service to assess the Engineering personnel required during the Fourth Plan period; and

(*b*) if so, the details thereof?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) Yes.

(*b*) A copy of the report has been placed in the Legislature Library.

திரு. வை. சங்கரன் : அதைப் பார்த்த பிறகு உப கேள்வி கேட்க சந்தர்ப்பம் இருக்காது. ஆகையால் இந்தக் கேள்வியை நாளைக்கு ஒத்தி வைக்க ஏற்பாடு செய்யலாமா?

கனம் சபாநாயகர் : கனம் அங்கத்தினர் அவர்கள் இப்போதே அதைப் படிக்கலாமே?

* 382 கேள்வி—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அங்கஹீனமானவர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க சட்டமியற்றும் உத்தேசம் சர்க்கார் பரிசீலனையிலுள்ளதா?

(இ) மத்திய அரசு அத்தகைய சட்டமியற்றுவதற்காக நமது ராஜ்யத்தின் கருத்து கோரியுள்ளதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) & (இ) இல்லை.

திரு. எம். எஸ். செல்வராஜன் : அங்கஹீனமானவர்களுக்கு, குறிப்பாக கண் இழந்தவர்களுக்கு, கை கால் முடமானவர்களுக்கு விசேஷமான பயிற்சி எல்லாம் கூட பல இடங்களில் கொடுக்கப்பட்டு வருகிறது. அத்தகைய பயிற்சி பெற்ற அங்கஹீனமானவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க அரசாங்கம் விசேஷமாக என்ன ஏற்பாடு செய்திருக்கிறது என்று அறியலாமா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : The need to provide special facilities in rendering employment assistance to the physically handicapped has been widely recognised and a Special

Employment Office has been set up for registering the physically handicapped and for exploring possible avenues of employment for them. The Employment Officer is a trained officer and he makes special efforts in locating suitable employment for the physically handicapped. While the Government of India have accorded priority III for the physically handicapped for employment in the Central Government establishments, the Madras Government have issued orders to employing departments to view their cases with sympathy and consider them for all such vacancies for which their handicaps may not stand in the way. This Government have also issued orders giving relaxation in the matter of age by raising the upper age-limit by ten years. A Special Medical Board has also been set up for their medical examination.

திரு. வை. சங்கரன் : குறிப்பாக குருடர்கள் விசேஷ பயிற்சி பெற்றவர்கள் பல பேர்கள் இருந்தும், முக்கியமாக மந்திரி போன்றவர்கள் சொன்னாலும் கூட, தனியார்கள் தொழிற்சாலைகளில் அவர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ளத் தயாராக இல்லை. சாதாரணமாக அங்கங்கள் முழுவதும் இருப்பவர்கள் கிடைக்கும் பொழுது, அங்கஹீனமானவர்களை எடுத்துக்கொள்ள அவர்கள் தயாராக இல்லை. ஆகவே, தனிப்பட்டவர்கள் தொழிற்சாலைகள் குறிப்பிட்ட அளவுக்கு பயிற்சி பெற்ற குருடர்களை வேலைக்கு வைத்துக்கொள்வதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா ? அது மட்டும் இல்லாமல் சர்க்கார் தொழிற்சாலைகளில் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு அங்கஹீனமானவர்களை, பயிற்சி பெற்ற குருடர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ளவேண்டும் என்று ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதற்காக தனிப்பட்டவர்கள் தொழில் நிலையங்களின் பிரதிநிதித்துவம் வாய்ந்த ஆலோசனைக் குழு ஒன்று இருக்கிறது. அந்தக் குழுவினர் அவ்வப்பொழுது இதைப்பற்றி பரிசிலனை செய்கிறார்கள். அதில் தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகளும் வருகிறார்கள். அவர்கள் அனுதாபத்தோடு இதில் கவனம் செலுத்தி, குறிப்பிட்ட வேலைக்கு தகுதி உள்ளவர்களை எடுத்துக்கொள்கிறோம் என்று சொல்லிவருகிறார்கள். எடுத்து கொண்டும் வருகிறார்கள்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : இங்கிலாந்து தேசத்தில் இதைப் போன்று அங்கஹீனமானவர்களுக்கு நான்கு சதவிகிதம் கட்டாயமாக வேலை கொடுக்கவேண்டும் என்று ஒதுக்கீடு செய்வதற்கு ஒரு சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. அதுபோன்று ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் அங்கஹீனமானவர்களுக்கு தொழில் நிறுவனங்களில் வேலை வாய்ப்பு கொடுக்கப்படவேண்டும். குறிப்பாக சர்க்கார் நிறுவனங்களில் இம்மாதிரி அவர்களுக்கு வேலை கொடுக்கப்படவேண்டும் என்ற ஏற்பாட்டைச் செய்ய அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இங்கிலாந்திலுள்ள நிலைமை வேறு. அங்கே அதிகமாக வேலையில்லாத் திண்டாட்டம் இல்லை. அங்கே வேலை மனிதனைத் தேடிக்கொண்டு போகிறது. இங்கே இருக்கிற நிலைமையிலே அவ்வாறெல்லாம் சட்டம் செய்வது முறை

[4th November 1966

அல்ல. கூடுமானவரையில் அங்கஹீனமானவர்கள் எந்த வேலைக்குத் தகுதியோ அந்த வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும் என்றுதான் வற்புறுத்தப்பட்டிருக்கிறது. அதுகுறித்தும் அரசாங்கத்தினுல் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

ஆசிரியர்கள் சம்பளமும், படியும்

*383 கேள்வி.—திரு. அ. ப. அழகமுத்து: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மலைப் பிரதேசங்களில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்பட்டுவரும் ஹில் அலவன்ஸை உயர்த்தக் கோரி ஆனைமலை ஆரம்ப ஆசிரியர்கள் யூனியன் 13—4—1965-ல் கனம் முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Yes.

(*b*) In June 1961, the Government had already sanctioned the Hill allowance to the teachers employed in hilly tracts like the Nilgiris, Palni, Anamalai Hills and Kolli Hills at the rates admissible under the rules. Hence no action was necessary on the above request.

* 384 *Q.*—SRI M. S. SELVARAJAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of trained Secondary Grade or Senior Basic teachers employed in Panchayat Unions, Local Bodies and Private Schools getting Higher Grade or Junior Basic scale; and

(*b*) will the Government come forward to provide Secondary Grade scale for them?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) About 5,000.

(*b*) No.

திரு. எம். எஸ். செல்வராஜன்: ஏராளமான செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் ஹையர் கிரேடு சம்பளம் பெற்று வேலை செய்யக்கூடிய ஒரு நிலைமை ஒருபுறம் இருக்க, மறுபுறத்தில் அன்ட்ரெயின்டு ஆசிரியர்களும் வேலை செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது. இம்மாதிரி நிலைமை பல பகுதிகளில் இருக்கிறது. இதையெல்லாம் அரசாங்கம் கவனித்து அந்தப் பகுதிகளில் செகன்டரி கிரேடு ஆசிரியர்களை வேலைக்கு அமர்த்துவதற்கு வழிவகை செய்வது பற்றி யோசிப்பார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: பள்ளிகளில் எத்தனை செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் இருக்க வேண்டும் என்று விதிக்கப்பட்டிருக்கிறது. அந்த அளவுக்குப் பணியாற்றுகிறவர்களுக்கு அதற்குத் தகுந்த சம்பள விகிதம் கொடுக்கப்பட்டு வருகிறது.